# குழந்தைக் கவி அமுதம்

தர்மேந்திரா



JPL
C1077

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைக் கவி

# அமுதம்

பொதுசன நூலகம்
உடனுதவும்
07-5-1991
பகுதி
யாழ்ப்பாணம்

தர்மேந்திரா

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

81944

வெளியிடுவோர் :
தர்மா வெளியீடு
28, கலைமகள் வீதி
அரியாலை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: மார்ச் 1991

விலை ரூ. 25/-

இலக்.த

Published by:
THARMA PUBLISHERS
28, Kalaimagal Veedi
Ariyalai
Jaffna.

Printed at:
The Kumaran Press,
201, Dam Street,
Colombo-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

அருளோங்கும் மெய்யன்பர்களே!

செல்வன் தர்மேந்திரா அவர்கள் யாத்து சைவ உலகுக்கு அளித்திருக்கும் 'குழந்தைக் கவியமுதம்' என்ற கவிதைத் தொகுதியைப் படித்தோம்· ஆனந்தமுற்றோம், அதிசயமுற்றோம். இவருக்கு வயது பத்து. கற்கும் வகுப்பு ஐந்தாம் ஆண்டு.

அநாயாசமாகக் கவிகள் இயற்றும் இப் பாலகவி, திருஞானசம்பந்தப் பெருமானைப் போன்றதொரு அருட் கவி, வரகவி, தனிப்பிறவி எனில் மிகையாகாது.

இறையருளும், கலைவாணியின் கடாக்ஷமும் இவருக்கு நிறைய உண்டு. இவரின் பெற்றோர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்கள். யாம் புகர்வதொன்றும் மிகையல்ல. இவர் நோய் நொடியின்றி நலமே நீடு வாழ்ந்து, பெரும் கல்விமானாக உயர்வுற்று மேன் மேலும் கவிப் பணிகளை தொடர்ந்து ஆற்றவேண்டுமென எல்லாம்வல்ல இறையருளைத் தியானித்து எமது பூரண நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்
நல்லை திருஞான சம்பந்தர்
ஆதீனம்

நல்லூர்,
யாழ்ப்பாணம்
9-1-91

107723



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## க. சொக்கலிங்கம் (சொக்கன்)

ஒருவன் ஒரு துறையிலே திறமை வாய்ந்தவனாய் விளங்க வேண்டுமானால் அத்துறையிலே ஆழ்ந்த ஈடுபாடு, நிறைந்த கல்வி, பரந்த அநுபவம் என்பவற்றைப் பெறுவது இன்றியமையாததாகும். எனினும் சைவ மக்களாகிய நாம் ஒருவனது மேன்மைக்கெல்லாம், இவையாவிலும் அவனது முன்வினைப் பயனே காரணம் என்று நம்புகின்றோம். 'கருவிலே திரு' அமைந்தோர் முற்கூறிய மூன்று திறங்களும் கைவராத நிலையிலும், தமது துறையிலே ஈடு இணையற்று விளங்குவர் என்பது எமது உறுதியான முடிவாகும். 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்' பாலறாவாயரான திருஞானசம்பந்தப் பெருமானுக்கு அவரது ஊழ்வினைப் பயனாலும், சிவபெருமானது திருவருளாலும் அவர்தம் மூன்று வயதுப் பிராயத்திலேயே கைவந்தன. மேனாட்டார் இவ்விடத்தில் எங்களைப் போன்ற நம்பிக்கையைப் பெற்றிராவிட்டாலும் ''பாலமேதை'' (Prodigy) தோன்றலாம் என்பதை மறுத்ததில்லை. 1770 ஆம் ஆண்டு ஜேர்மனியில் பிறந்த இசை மேதையாகிய லுட்விக் வான் பீதோவன் (Ludwig Van Beethoven) தனது நான்காம் வயது பூர்த்தியாக முன்னரே, நான்கு சாகித்தியங்களை இயற்றினான் என்பது வரலாறு தரும் செய்தி.

இவ்வுண்மைகளையெல்லாம் நிறுவும் வகையிலே ஈழத் தமிழராகிய எம்மிடையேயும் பாலமேதை ஒருவர் தோன்றியுள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சி தருவதாகும். செல்வன் தர்மேந்திரா...... அவர்களுக்கு வயது பத்து. அவர் கற்கும் வகுப்பு ஐந்தாம் ஆண்டு. ஒழுங்காகத் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துகளையே இக்காலச் சிறார் எழுத இடர்படும் இக் காலத்தில் செல்வன், தர்மேந்திரா..... அழகும், எளிமை யும், ஓசை நயமும் வாய்ந்த கவிதைகளை அநாயாசமாக் இயற்றித் தாம் ஒரு பாலகவி, வரகவி என்பதை நிரூ பித்து வருகின்றார். இவரின் கவிதையாற்றலைக் கண்டு கற்றோரும், கவிஞர்களும் வியப்பும் நயப்பும் வெளிப்படுத்து கின்றார்கள். இவரால் இவர் பிறந்த குடும்பம் மட்டுமன்றி ஈழத் தமிழகமே பெருமை அடைவது நியாயமானதே.

இவருடைய மேதா விலாசத்தினைத் தூண்டி உற் சாகப்படுத்தி மேனிலைக்குக் கொண்டுவர இவருடைய பெற்றோர் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக் கவை. கர்மயோகியான இவர் தந்தையார் ஐ. தர்ம குல சிங்கம் இவரைத் தம் மகன் என்பதால் அடையும் பெருமையிலும் இவர் 'தமிழர் தம் அரும் செல்வம்' என் பதை உணர்ந்து கவிதைத் துறையிலே இவரை ஊக்கு வித்து நிலை நிறுத்த இவரது ஆக்கங்களை நூல்வடிவிலே வெளிக்கொணர்வது பெரிதும் நயக்கத் தக்கதே. காகிதப் பஞ்சம், பொருளாதார நெருக்கடி, முன் எப்பொழுதும் இல்லாத குழப்பநிலை என்பன தலைவிரித்தாடுகின்ற இந் தக் காலத்தில் இத்தகையதொரு நூலை வெளியிடுவது காலத்தாற் செய்த நன்றியாகும். அது ஞாலத்தின் மாணப் பெரிது என்புதற்கு ஐயம் இல்லை.

இந் நூலிலே வேறொரு சிறப்பும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதன் கண் வெளியாகும் பாடல் கள் எவையும் எவ்வித திருத்தத்திற்கும் உள்ளடக்கப்பட வில்லை. கருத்து, சொல்லாட்சி, யாப்பு யாவிற்கும் பால கவி அவர்களே பொறுப்பாளர்.

அரியாலையூர்ப் பாடசாலை
அழகு நிறைந்த பாடசாலை
அங்கு படிக்கும் சிறுவர்கள்
அறிவு வளர்ச்சி பெற்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தம் பாடசாலை அன்னையைப் பாராட்டி மகிழும் இக் குஞ்சுக் கவிஞர் பறவைகளோடு பறவையாய், இறைவன் அடியார்களோடு அடியாராய், அம்மாவின் அருமைக் குழந்தையாய் எல்லாம் மாறி நின்று மழலைத் தமிழ் அமுதத்தைக் கவிதைகளாய் வடித்துக் தரும் இன்பத்தை எல்லாம் சுவையுங்கள் என்று தமிழன்பர்களை ஆற்றுப்படுத்தி அமைகின்றேன்.

கல்லும் மணலும் சாந்தும் கலந்து
கவனமாகக் கட்டிடுவோம்
அல்லும் பகலும் வசிப்பதற்கே
நல்ல வீடுகள் கட்டிடுவோம்.

கட்டிய வீடுகள் யாவும் இடிக்கப்பட்டுப் பாழாகி ஈழத் தமிழர் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரோடு அகதிகளாய் அலைகையில், எங்கள் குழந்தைக் கவிஞர் கட்டிய அழகிய கவி வீடுகள் எம் நெஞ்சங்களிலே உறுதியான அத்திவாரத்தில் நிலைக்க வேண்டும் என்று நல்லை முருகனின் பாத கமலங்களை இறைஞ்சுகின்றேன்.

(27 - 12 - 90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

கீழ் வகுப்புகளிலே படிக்கும் மாணவர்கள் பாடுவதிலும் ஆடுவதிலும் மிகுந்த ஆர்வமுடையவர்கள். சற்றே வளர்ந்த பின்னர் வாய்விட்டுப் பாடுவதற்கும் சுதந்திரமாய் ஆடுவதற்கும், பிள்ளைகள் பலரும் வெட்கப்படுவதுண்டு. ஆனால் கள்ளங்கபடில்லாத பிள்ளைப் பருவத்திலே அந்த விதமான வெட்கமோ கூச்சமோ பெரும்பாலான குழந்தைகளிடம் இருப்பதில்லை.

பாடுவதும் ஆடுவதும் மனித குலத்துக்கு இயல்பான கலை வெளிப்பாட்டு முறைகள். ஓவியம் சிற்பம் முதலியனவும் மனித மனத்தின் ஆக்க ஊக்கத்தைக் காட்டி நிற்கும் கலைகளே. ஆனால் ஓவியம் தீட்டுவற்குத் தாள், தூரிகை, வண்ணம், திரை, சுவர் போன்ற சாதனங்கள் வேண்டும். சிற்பம் செய்வதற்கு களிமண்ணோ மெழுகோ கல்லோ உலோகமோ சாந்தோ சீமெந்தோ வேண்டும். இவை கலைச் சாதனங்கள். ஆனால் பாடுவதற்கும் ஆடுவதற்கும் உரிய சாதனங்ளை நாம் வெளியுலகிலே போய் தேடி எடுக்க வேண்டியதில்லை. மனித உடலிலேயே அவை அமைந்துள்ளன. ஒலிக்கும் குரலும் – வாயும் கையும் காலும்தான் பாட்டுக்கூத்துக்கு வேண்டிய சாதனங்கள். ஆகையினால் பாட்டும் கூத்தும் மிகவும் பழமையான கலை வடிவங்கள் என்று கருதுவது பிழையாகாது.

மனித நாகரீகத்தின் இளமைப் பருவத்திலே – வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே தோன்றியவை இந்தக் கலை வடிவங்கள். தனியொருவனையோ ஒருத்தியையோ எடுத்துக் கொண்டாலும் இளமைப் பருவத்திலே இந்த உந்தல்கள் (பாடும் விருப்பமும் ஆடும் வேட்கையும்) தோன்றி விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் இளம் பருவத்திலே ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒவ்வொரு குழந்தையும் புதுப்புது பாட்டுக்களைத் தானாகவே இயற்றி முணுமுணுத்தும் பாடியும் இன்பம் காணுகிறது. ஆனால் வளர்ந்தோர் சமூகம் அந்தக் குழந்தைப் பாட்டுக்களைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. பிள்ளை ஏதோ 'அலட்டுகிறது' என்று புறக்கணித்து விடுகிறோம். அவ்வளவில் நிற்பதில்லை. இயல்பான பாட்டையும் கூத்தையும் கேலி செய்து ஒடுக்கி விடுகிறோம். இதனால் ஆடுவதும் பாடுவதும் அடங்கி விடுகின்றன. வெட்கமும் கூச்சமும் தோன்றுகின்றன. அரும்பும் புலவன் ஒருவன் உள்ளடங்கி மறைந்து போகின்றான்.

ஒவ்வொருவனின் உள்ளும் இருக்கும் கலைச் சுடர் மங்கி நூர்ந்துபோகும் சோக வரலாறு இது. ஆனால் எல்லா இசை வாணர்களும் அரும்பிலே கருகுவதில்லை எல்லாக் கூத்தர்களும் எல்லாக் கவிஞர்களும், எல்லாக் கலைஞர்களும் முளையிலே வாடி விழுவதில்லை. சிலர் தப்பி விடுகிறார்கள். தலையெடுத்து மேலோங்கிச் செழித்து வளர்கிறார்கள்.

அவ்விதமான வளர்ச்சியை எதிர் நோக்கி நிற்பவர் தம்பி தர்மேந்திரா. அவருடைய உள்ளாற்றலை இனங் கண்டு, அது வளர்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்த பெற்றோரை நாம்பாராட்ட வேண்டும். இந்த இளம் கலைஞனுக்கு ஆதரவாக இருக்கும் குடும்பத்தையும் நண்பர்களையும் நாம் மெச்சுதல் வேண்டும். ஏனென்றால் தர்மேந்திராவின் இயல்பான கலை நாட்டத்தைப் பேணி வளர்ப்பதில் அவர்கள் பெரும் பங்கு கொண்டுள்ளனர். 'தட்டிக் கொடுத்தால் தமிழ்க் கவிதை வாழ்வு பெறும்' என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

தர்மேந்திராவின் ஆக்கங்கள் செயற்கைத் தன்மை இல்லாதவை. வளர்ந்தோர் உலகில் காணப்படும் உருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டல் மிரட்டல்களோ, திரிபுகளோ, பாவனைகளோ, பாசாங்குகளோ இங்கு இல்லை. நேர்மையான பிஞ்சுள்ளம் நேரடியாகவே பேசுகிறது, ஆகையினாலே இவை பிள்ளை மனத்தின் பிசகற்ற பேச்சுக்களாக உள்ளன. உணர்வின் ஓசைகளை உள்ளபடி ஒலிக்கும் ஆற்றல் தர்மேந்திரா வுக்கு விரைவில் உண்டாகும் என்னும் நம்பிக்கை நமக்கு தோன்றுகிறது.

'மாம்பழம்' தொடக்கம் 'சுலைமகள்' வரையிலான நாற்பது படைப்புகளிலும் தன்னைச் சூழ உள்ள சகல வற்றையும் தரிசிக்கும் தர்மேந்திராவின் பாட்டுத் திற னைப் பார்க்கிறோம். 'இத்தனை சிறு வயதிலே இவ் வளவு மன விரிவா, துணிதிறனா, செயல் முனைவா', என்று நாம் வியக்கிறோம்.

தொகுதியில் இடம்பெறும் முதற்பாட்டே இந்தத் தொகுதியின் பண்பையும் பயனையும் காட்டி நிற்கின்றது.

"...இனிமையான தேன்பழம்
இனிக்க இனிக்க சாப்பிடுவோம்.
தம்பி நீயும் வந்திடுவாய்
விரைவாய் உனக்கும் தந்திடுவேன்
அருமையான மாம்பழம்
இருவரும் இதைச் சுவைத்திடுவோம்"

இரண்டு பேர் சுவைத்தாற் போதுமா? ஆம் போதுமே! ஒருவன் கலைஞன் மற்றவன் சுவைஞன். இந்த இரண்டு பேரும் (இரு சாராரும்) பகிர்ந்து கொள்ள வேண்டியவை தானே கலைப் படைப்புக்கள்!

நீர்வேலி தெற்கு
நீர்வேலி.
*1991. 01. 14.*

— இ. முருகையன்.

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

அருட் செல்வன் தர்மேந்திரா தர்மகுலசிங்கம் அவர்கள் அரியாலை கலைமகள் வீதியிலுள்ள மிதிலைவாசன் சமாதான நீதிபதி திரு. நா. இராமலிங்கம் ஆசிரியர் அவர்களின் பேரனாவார்!

சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை என்னும் வாக்கியத்தில் தர்மமே தமது தலையாயது என்பது போன்று திரு நாமம் பொருந்திய செல்வன் தர்மேந்திரா அவர்கள் தற்போது பத்து வயதுப் பாலகன்.

பாலர்க்குப் பாலகன் பாமாலை சூட்டுகின்ற
மூலக் கரு அன்னோன் முற்பிறப்பில் விட்டகுறை
ஞாலத்தி லேதொடர நாவரசி வாணியம்மா
சீலத் திருவருளே செய்கின்றாள் வாழியவே!

செல்வன் தர்மேந்திரா அவர்கள் தமது "குழந்தைக் கவி அமுதம்" என்னும் பாலர் பாடலில்,

"குந்தி மகன் போல் வளர்த்திடுவாள் எம்மைக் கொடையாளி ஆக்கிடுவாள்" என்று அம்மாவைச் சுட்டிக் காட்டும் பாடலில், செல்வன் தர்மேந்திரா அவர்கள் கொடையாளி கர்னன் இடத்தில் வைத்துக் கணிக்கப்படுகின்றார். மேலும் பாடல்களிலே இனிமை தவழ வேண்டும் என்பதை மறைமுகமாகக் காட்டுவான் வேண்டி தமது "குழந்தைக் கவி அமுதம்" என்னும் பாலர் பாடல் தொகுதியின் முதலாவது பாடலில் மாம்பழத்தை எடுத்தாண்டு அது தேன் பழமென்று சிறப்பித்துக் கூறுகின்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய லோக தயாநிதியாகிய சரஸ்வதி தேவியின் கிருபா கடாட்சத்தால் கன்னித் தமிழ் முன்னிலையில் செல்வன் தர்மேந்திரா அவர்கள் ''கவிச் செல்வன்'' தர்மேந்திராவென மிளிர வேண்டுமென்று எனது குலதெய்வமாகிய கலாவாணியை வேண்டி கவிச் செல்வன் தர்மேந்திரா அவர்களின் கவிப்பணி கல்விப் பணியோடு நிறைந்து வாழ்கவென்று நெஞ்சார வாயார வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்

*35, கலைமகள் வீதி*<br>*அரியாலை*<br>*யாழ்ப்பாணம்.*

கவிஞர் அரியாலையூர்<br>வே. ஐயாத்துரை<br>*23 - 12 - 1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# பாயிரம்

1. ஒருமூன்றே யகவையினில் திருஞான சம்பந்தப்
பெருமான்றந் திருவாயால் பெருவாக்கே
யருளினரால்
அருமானாந் தனையேந்தி அருளால் அவர்வாக்குக்
கருமால் நங் கழிபிறப்பைக் கழிக்குமது கண்டோமே!

2. அற்புதமொன் றிங்கே யருகே நிகழ்ந்துளது
சொற்பதங்கள் கடந்தபிரான் தொல்லருளால்
இக் குழந்தை
கற்பனையும் தன்வயதுக் கடங்காத சொல்லாட்சி
விற்பனமும் கொண்டெமக்கு வியன்றமிழைத்
தந்தானே!

3. வித்தகனாய் என்றென்றும் மேலான நற்கவிதைப்
புத்தமுதைத் தந்தெமக்குப் போதிக்க வல்லானாய்த்
தத்தி நடை போடும் தருமேந்தி ரக் கவிஞன்
தித்திக் கத் தேன்தமிழைத் தேசத்துக் களிப்பானே!

வேறு

4. பாலர் களுக்கேற்ற பரிசாம் இவன்பொங்கல்
பாலமுது தேன் பாகு பருப்புடனே—ஏலமும்
சாலவே சேர்த்துச் சமைத்த வரும்படையல்
ஞானமிது கொள்க, நயந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாலர்காள் வம்மின்! பெரியீர்! இவன் படையல்
சீலமார் செல்வச் செழும் புதையல்—காலமெலாம்
குழந்தைக் கவிஞனிவன் குவலயத்தில் மென்மேலும்
வளர்ந்தோங்க வேண்டுகிறேன், வாழ்த்து!

என்றும் சிவன் நலம் விரும்பும்,

அருட்கவி நாக. பரமசாமி,
அதிபர்,
யா / நல்லூர் ஆனந்த வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

'குருபாதம்',
28, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
14—01—1991.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி

பால் மணம் மாறாத பருவத்தில் கவிபாடல்
வேல் முருகன் செய்யும் விளையாட்டாம் — நூலுருவில்
செந் தமிழ் அன்னைக்கு சிறந்த அணிகலனாய்
பைந் தமிழாம் பாமாலை போடு.

★

வல்லவனாய் நல்லவனாய் வாக்குறுதி கொண்டவனாய்
எல்லாப் பொருள் மீதும் எழுதிடுவாய் — நல்லோருன்
நாவன்மை கண்டு நயந்து வியப்படைய
பாவன்மை கொண்டவனாய் பாடு.

★

தொட்டகுறை விட்டகுறை தொடருமென்ப தைதீகம்
மொட்டுகளே மணம் வீசும் மாமலராம் - நுட்பமுடன்
களையாமல் சளையாமல் கவிபாடித் துதிபாடி
விளையாடி வெல்க விருது.

★

## விருத்தம்

ஆண் டைந்து பயில்கின்ற அன்பான தர்மி
காண் கின்ற பொருள் பற்றிக் கவி பாடுகின்றாய்
பாண் டித் திய மின்றிப் பாமாலை புனைதல்
ஆண் டவன் செய லென்ற அனு மானம் தோன்றும்

மிதிலை
கலைமகள் வீதி
அரியாலை மேற்கு
யாழ்ப்பாணம்
10 - 1 - 91

இவ்வண்ணம்
நா. இராமலிங்கம் (சமாதான நீதவான்)
(பேரனாரும், முன்னைநாள் அதிபர்
யா/நல்லூர் ஆனந்த வித்தியாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையல்

பழகிய தமிழர் மொழியினிலே
பாங்காய் கவிகள் சமைத்திடவே
குலத்தின் தெய்வம் நாச்சியம்மாள்
குடியாய் நாவில் வந்திடுவாய்

81944



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| மாம்பழம் | பாடசாலை | 1 |
| பறவை | நல்லூர்க் கந்தன் கோவில் | 2 |
| அம்மா | உழவுத் தொழில் | 3 |
| பசு | பூனை | 4 |
| வாழை | மலர் | 5 |
| சைக்கிள் வண்டி | | 6 |
| காகம் | காலைப் பொழுது | 7 |
| சேவல் | எருது | 8 |
| வீடு | | 9 |
| இரவு | கமம் | 10 |
| பந்து | வெண்ணிலா | 11 |
| பனை | | 12 |
| என் துக்கம் | மழை | 13 |
| பாட்டி | | 14 |
| கல்வி கற்றிடுவோம் | | 15 |
| காற்று | பட்டம் | 16 |
| முருகன் | ஆகாய விமானம் | 17 |
| மயில் | குழந்தை | 18 |
| தைப் பொங்கல் | அன்புத் தம்பி | 19 |
| புத்தகம் | பாரதியார் | 20 |
| அப்பா | | 21 |
| ஆசிரியர் பிரியாவிடைக் கவிதை | | 22 |
| ஐந்தாம் ஆண்டு மாணவர் பிரியாவிடைக் கவிதை | | 23 |
| வாழ்த்துப்பா | | 24 |
| கலைமகள் | | 25 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. மாம்பழம்

மாம்பழம் நல்ல மாம்பழம்
மாமா தந்த மாம்பழம்
இனிமையான தேன்பழம்
இனிக்க இனிக்கச் சாப்பிடுவோம்

தம்பி நீயும் வந்திடுவாய்
விரைவாய் உனக்கும் தந்திடுவேன்
அருமையான மாம்பழம்
இருவரும் இதையே சுவைத்திடுவோம்

## 2. பாடசாலை

அரியாலை ஊர்ப் பாடசாலை
அழகு நிறைந்த பாடசாலை
அங்கு படிக்கும் சிறுவர்கள்
அறிவு வளர்ச்சி பெற்றவர்கள்

நானும் அங்கு சென்றிடுவேன்
நன்கு பாடம் படித்திடுவேன்
பள்ளிப் பாடம் படிப்பதற்கே
இலவசப் புத்தகம் கிடைத்திடுமே

பாலர் பலரும் செல்வார்கள்
பாடி ஆடி மகிழ்வார்கள்
தோழர் பலரைச் சந்திப்போம்
தோழா நீயும் வந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பறவை

பறவை நல்ல பறவையிது
பறந்து திரியும் பறவையிது
சிறந்த வண்ணச் சிறகுகளும்
சீரும் சிறப்பும் மிக்கனவே

நல்ல சோலை கண்டிடுவீர்
நறிய கனிகள் உண்டிடுவீர்
சில்லென வீசும் காற்றையுமே
சிறகு கொண்டு தாங்கிடுவீர்

உங்கள் இனமே பறவையினம்
உயரப் பறக்கும் உயிரினமே
எங்களுக்கும் சிறகிருந்தால்
எங்கும் பறந்து திரிவோமே

## 4. நல்லூர்க் கந்தன் கோவில்

நல்லூர் என்னும் ஊரினிலே
கந்தன் கோவில் ஒன்றுண்டு
பல்லூர் மக்கள் வருவார்கள்
பாடி ஆடித் தொழுவார்கள்

கோலம் மிகுந்த கண்டாமணி
காலம் எல்லாம் ஒலித்திடுமே
சாலவும் மக்கள் கேட்டிடவே
ஆலயம் நோக்கி விரைந்திடுவர்

தேரில் முருகன் வந்திடவே
தீரா வினைகள் தீர்ந்திடுமே
பாரில் நாளும் நலமுறவே
நல்லூர் நோக்கி விரைந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. அம்மா

நம்மைப் பெற்ற அம்மாவே
நாமம் சூட்டி வளர்த்திடுவார்
செம்மையாக அவர் வளர்த்து
சீரும் சிறப்பும் பெறவைப்பார்

அருமை கொண்டு வளர்த்திடுவார்
அன்னம் ஊட்டி வளர்த்திடுவார்
பெருமையாக அவர் வளர்த்து
பெயரும் புகழும் பெறவைப்பார்

குறும்பை அறுக்க முயன்றிடுவார்
சிறுமை நீக்க அடித்திடுவார்
குந்தி மகனாய் வளர்த்திடுவார்
கொடையில் கன்னன் ஆக்கிடுவார்

## 6. உழவுத் தொழில்

உழவுத் தொழிலைச் செய்திடுவோம்
உலகம் வாழச் செய்திடுவோம்
களவு இன்றி வாழ்க்கையிலே
கமத்தை நன்கு செய்திடுவோம்!

ஏரைப் பிடித்து உழுதிடுவோம்
ஏக்கர் நிலத்தில் உழுதிடுவோம்
சீராய் நிலத்தில் உழுதிடுவோம்
சிக்கனம் கொண்டு உழைத்திடுவோம்!

உண்டி கொடுக்க உழைத்திடுவோம்
உத்தமர் ஆக நடந்திடுவோம்
புண்ணியம் செய்து பாரினிலே
பேரும் புகழும் அடைந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. பசு

பசுவை நன்கு போற்றிடுவோம்
பசும்புல் கொடுத்தே வளர்த்திடுவோம்!
மாசு இல்லா மிருகமிதைக்
காசு கொடுத்து வாங்கிடுவோம்!

காலை நேரம் இரை தேடி
மாலை வீடு வந்திடுமே
பாலை எமக்குத் தந்திடுமே
பண்பாய் இதையே வளர்த்திடுவோம்!

வண்டி இழுக்கக் காளையுடன்
வயலுக் கெருவும் தந்திடுவாய்!
பாரி போன்று ஈந்திடுவாய்!
பாரில் உன்னைப் போற்றிடுவோம்!

## 8. பூனை

பூனை நல்ல பூனையரே
புலி போலுருவம் பெற்றவரே
புலியை விடவும் இளையவரே
எலியைப் பிடித்து வாழ்பவரே!

நானும் உன்னை நினைத்திடுவேன்
நல்ல உணவும் தந்திடுவேன்
நாளும் உன்னை நினைத்திடுவேன்
நல்ல பெயரும் வைத்திடுவேன்!

அடுப்படி நோக்கி வந்திடுவாய்
அன்புத் தம்பி ஆக்கிடுவேன்
அன்னம் உனக்கு ஊட்டிடுவேன்
அழகா என்று அழைத்திடுவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. வாழை

முக்கனிகள் ஒன்றே நீ
முனிவு கொண்டு வெட்டினாலும்
மீண்டும் நன்கு தளிர்த்திடுவாய்
காலம் எல்லாம் களித்திடுவாய்

பத்தடி உயரம் வளர்ந்திடுவாய்
பொத்தி ஒன்றைப் போட்டிடுவாய்
பொன்னிறப் பழங்கள் வந்திடவே
வாழ்க்கை எல்லாம் முடிந்திடுமே

தோட்டக்காரன் வந்திடுவான்
அடியோடுன்னை வெட்டிடுவான்
நன்றி கெட்ட மனிதனிவன்
பொன்னிறப் பழங்களை விற்றிடுவான்!

## 10. மலர்

மலரே மலரே மாமலரே
மணத்தை வீசும் நறுமலரே
பற்பல வர்ண நிறத்துடனே
பலரைக் கவரும் தன்மையரே

காலை நேரம் மலர்ந்திடுவீர்
களிப்புடன் மணத்தைப் பரப்பிடுவீர்
மாலை நேரம் வாடிடுவீர்
மாலை புனைய உதவிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளித் தகடு சூரியனும்
மெள்ள மெள்ள வந்திடவே
துள்ளித் துள்ளி மகிழ்ந்திடுவீர்
அள்ளி மணத்தைப் பரப்பிடுவீர்

இறைவன் மேனியில் மாலையுமாய்
இன்பம் பொங்க இருந்திடுவீர்
நறையைச் சேர்க்கும் அளிகளுடன்
நேசமாய் நிதமும் இருந்திடுவீர்

## 11. சைக்கிள் வண்டி

சைக்கிள் வண்டி ஓடிடுவோம்
சகல இடங்கள் போயிடுவோம்
மிதிக்க ஓடும் வண்டியிது
விரைவாய் நாமும் சென்றிடுவோம்

குதிரை போலே விரைந்திடுவோம்
குளிக்கும் குளங்கள் கண்டிடுவோம்
நறிய சோலை சென்றிடுவோம்
நல்ல பறவை கண்டிடுவோம்

சிட்டுப் போன்றே விரைந்திடுவோம்
சிறுவர் நாமே சென்றிடுவோம்
பட்டு உடையில் போயிடுவோம்
பாலர் நாமே போயிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. காகம்

காலை நேரம் கரைந்திடுவாய்
கடிதம் வருவதைத் தெரிவிப்பாய்
நாளும் உன்னை நினைத்திடுவேன்
நன்கு உன்னைப் போற்றிடுவேன்

உணவைக் கண்டால் கரைந்திடுவாய்
இனத்தை மேலும் அழைத்திடுவாய்
சினவு கொண்டு துரத்திடவே
சிந்தனை செய்து பறந்திடுவாய்

பறந்து திரியும் பறவைகளில்
பாடும் தன்மை வாய்ந்தவளே
சோலைக் குயிலின் முட்டையினை
சோர்வு இன்றிக் காத்திடுவாய்

## 13. காலைப் பொழுது

பொது நூலகம்
மாநகர நூலக
யாழ்ப்பாணம்

காலைப் பொழுது தோன்றிடுமே
கதிரவன் உதித்து வந்திடவே
மாலைப் பொழுதில் ஓய்வெடுத்த
மாந்தரும் துயிலே நீங்கிடுவர்

கல்வி கற்கச் சிறுவர்களும்
காலை நேரம் எழுந்திடுவர்
அல்லில் மகிழும் ஆந்தையுமே
அதிகாலையிலே சோர்ந்திடுமே

கறவைப் பசுவும் காலையிலே
காடு நோக்கி விரைந்திடுமே
பறவை எல்லாம் அலைந்திடுமே
பாரைச் சுற்றித் திரிந்திடுமே



81944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. சேவல்

சேவல் நல்ல சேவலிது
கூவல் கூவி மகிழ்ந்திடுமே
ஆவல் கொண்டு கேட்டிடுவோம்
அன்புடன் நாமும் வளர்த்திடுவோம்!

அழகாய் நிதமும் இருப்பதற்கு
ஆரம் ஒன்று கட்டிடுவோம்
பலரைக் கவரும் இறகுகளால்
பாரில் குளிரைத் தாங்கிடுமே!

வைக்கோற் போரைக் கண்டிடவே
வாஞ்சை கொண்டு ஏறிடுமே
பக்குவமாகச் சொண்டுகளால்
பார்த்துக் கொத்திச் சுவைத்திடுமே!

## 15. எருது

வண்டி இழுக்க உதவிடுவாய்
வயலுக்கு உரமும் தந்திடுவாய்
நண்பன் போன்று நம்முடனே
நட்புடன் நீயும் இருந்திடுவாய்!

கண்மணி போன்றே காத்திடுவோம்
கதற உன்னை விடமாட்டோம்
பண்பாய் நாளும் வளர்த்திடுவோம்
பசும்புல் உனக்கு தந்திடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழனி உழவும் உதவிடுவாய்
கவலை ஏதும் உனக்குண்டோ?
உழவு புரிய உதவுவதால்
உழவர் உன்னைப் போற்றிடுவர்!

வேட்டையாட யாரும் இல்லை
காட்டையழிக்க எவரும் இல்லை
நாட்டை நோக்கி வந்திடுவாய்
நமக்கு என்றும் உதவிடுவாய்!

காட்டு மிருகம் ஒன்றுமில்லை
கெட்ட மனிதர் இங்குமில்லை
வீட்டை நோக்கி வந்திடுவாய்
விரன் போன்றே இருந்திடுவாய்!

## 16. வீடு

காடு அழித்து விடுவோமே
நாடு ஆக்கி வருவோமே
கூடு கட்டும் பறவைகளாய்
வீடுகட்டி வாழ்வோமே!
கல்லும் மணலும் சாந்தும் கலந்து
கவனமாகக் கட்டிடுவோம்
அல்லும் பகலும் வசிப்பதற்கே
நல்ல வீடுகள் கட்டிடுவோம்!

மாடி வீடும் கட்டிடுவோம்
கூடி ஒன்றாய்க் கட்டிடுவோம்
குடிகள் நாமும் இருப்பதற்கே
குடில்கள் பலவும் செய்திடுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. இரவு

இருளும் மெல்ல வருகிறது
இன்பம் பொங்கி எழுகின்றது
அருமையான பொழுது இது
அந்தி அழகும் தெரிகிறது

விண்மீன்கள் அழகினிலே
மண்ணும் மேலும் மிளிர்கிறதே
மண்ணில் வாழும் மாந்தருமே
மனையை நோக்கி விரைந்திடுவர்

வெள்ளி ஓடக் கூட்டத்திலே
வெண்ணிலாவும் வருகிறதே
அள்ளி நிலவைத் தருகிறதே
துள்ளி உள்ளம் குளிர்கிறதே

## 18. கமம்

காடு திருத்தி விடுவோமே
கழனி ஆக்கி வைப்போமே
வாடும் மக்கள் பசி போக்கி
வறுமை எல்லாம் அறுப்போமே

நீரைப்பாய்ச்சி விடுவோமே
நிலத்தைக் கொத்தி உழுவோமே
பாரில் உயர்வு பெற்றிடவே
சீராய் ஏரைப் பிடிப்போமே

களையை அகற்றி அழிப்போமே
கமத்தை நன்கு செய்வோமே
இளைப்பு இன்றி எந்நாளும்
ஈழம் எங்கும் உழைத்திடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. பந்து

பந்து நல்ல பந்துமிது
பாலர் நாமே அடித்திடுவோம்
சுந்தரம் மிகுந்த பந்துமிது
சுதந்திரமாக அடித்திடுவோம்

வட்ட வடிவப் பந்துமிது
வாஞ்சையோடு அடித்திடுவோம்
அடிக்க ஓடும் பந்துமிது
அருமையாக அடித்திடுவோம்

காலே இல்லாப் பந்துமிது
கவனமாக அடித்திடுவோம்
பால் வண்ணப் பந்துமிது
பாய்ந்து பாய்ந்து அடித்திடுவோம்

பூமி வடிவப் பந்துமிது
புரண்டு புரண்டு ஓடிடுமே
நாலா பக்கம் ஓடிடுமே
நாமும் இதையே அடித்திடுவோம்

## 20. வெண்ணிலா

காலையில் உறங்கிடுவாய் வெண்ணிலாவே
கவலை ஏதும் உனக்குண்டோ வெண்ணிலாவே
மாலையில் மகிழ்ந்திடுவாய் வெண்ணிலாவே
மனம் மாறி மாறி வாடுவதேன் வெண்ணிலாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைவில் நீ இருந்திடுவாய் வெண்ணிலாவே
தேய்ந்து பின்பு வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே
கலைகளுடன் வந்திடுவாய் வெண்ணிலாவே
கண்டவுடன் மகிழ்ந்திடுவோம் வெண்ணிலாவே

பந்தடித்து மகிழ்ந்திடுவோம் வெண்ணிலாவே
பாரில் நீ வந்திடுவாய் வெண்ணிலாவே
ஏந்தி நாம் அடித்திடுவோம் வெண்ணிலாவே
ஏக்கம் இன்றி இறங்கிடுவாய் வெண்ணிலாவே

வெண்ணிற உருவம் பெற்றவளே வெண்ணிலாவே
வசிக்க வீடு உனக்குண்டோ வெண்ணிலாவே
எண்ணும் எழுத்தும் கற்றாயோ வெண்ணிலாவே
விண்ணை விட்டு விலகாயோ வெண்ணிலாவே

## 21. பனை

பாரில் உயர வளர்ந்திடுமே
பல் வேறு பொருட்கள் தந்திடுமே
பாரி போன்று நாளெல்லாம்
வாரி வாரிக் கொடுத்திடுமே

காலம் எல்லாம் உதவிடுமே
கற்பக தருவெனப் போற்றிடுவோம்
சூலம் போன்ற இலைகளுமே
சுளகு செய்ய உதவிடுமே

ஆழம் ஆன வேர்களினால்
கனியும் உப்பும் உறிஞ்சிடுமே
கூழும் குடித்து மகிழ்ந்திடவே
குவித்து ஒடியல் தந்திடுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. என் துக்கம்

கார் வான் வெளியினிலே
 களிப்பாய் விமானம் திரிகையிலே
போரும் நடந்து வருகிறதே
 சீரிய வாழ்வும் கெடுகிறதே

சங்கத் தமிழும் அழிகிறதே
 சாவும் வந்து சேர்கிறதே
அங்கம் கூட அறுகிறதே
 அன்பு கூட மடிகிறதே

பாலர் கல்வி கெடுகிறதே
 பள்ளி நிறுத்தப் படுகிறதே
காலம் கூடப் பொல்லாதே
 ஞாலம் எல்லாம் கெடுகிறதே

குருதி வெள்ளம் பாய்கிறதே
 குபீர் என்று பாய்கிறதே
கருத்து மோதல் நடக்கிறதே
 கவலை என்றும் நிலைக்கிறதே.

## 23. மழை

மழையே மழையே பெய்துவிடு
 நாடு வளம் பெறப் பெய்துவிடு
மரங்கள் தழைக்கப் பெய்துவிடு
 மாரி காலத்தில் பெய்துவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்னல் மின்னப் பெய்துவிடு
மின்சாரம் வளம்பெறப் பெய்துவிடு
புகைவண்டி நன்கோடப் பெய்துவிடு
பூமி பூரிக்கப் பெய்துவிடு

உழவு உயரப் பெய்துவிடு
உலகம் வாழப் பெய்துவிடு
மண்ணும் மிளிரப் பெய்துவிடு
மாந்தர் எமக்கு உதவிவிடு

## 24. பாட்டி

வயது நிறைந்த பாட்டியவர்
வாஞ்சையாய் கதை கூறிடுவார்
பாட்டி என்று அழைத்திடவே
பாசம் கொண்டு சிரித்திடுவார்

பல்லும் இல்லாக் கிழவியர்
சொல்லும் எல்லாம் மறந்தாரே
பொல்லும் மெல்லப் பிடித்திடுவார்
பொக்கை வாயால் சிரித்திடுவார்

அல்லும் பகலும் மகிழ்வுடனே
பொழுதை எல்லாம் கழித்திடுவார்
அழகு யாவும் நீங்கிடவே
அழுது கொண்டே இருந்திடுவார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. கல்வி கற்றிடுவோம்

கல்வி அதனைக் கற்றிடுவோம்
காலை நேரம் கற்றிடுவோம்
பற்றுடனே பாடம் படித்திடுவோம்
நல்ல பழக்கம் பழகிடுவோம்

கலையில் ஞானம் பெற்றிடவே
கல்வியை நன்கு கற்றிடுவோம்
குலையைப் போடும் வாழையைப் போல்
பிறருக்கு உதவக் கற்றிடுவோம்

அன்னை சொல்லைத் தட்டாமல்
ஆசை கொண்டு கற்றிடுவோம்
சொன்ன சொல்லை நிறைவேற்ற
சகல கலையும் கற்றிடுவோம்

மேன்மை அடையச் செய்திடுவோம்
மேலும் மேலும் கற்றிடுவோம்
ஆண்மை உடைய மக்களுக்கு
அடங்கி வாழப் பழகிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. காற்று

மெல்ல மெல்ல வீசிடுமே
மாந்தர் வாழச் செய்திடுமே
சில்லென வீசி வந்திடுமே
தென்றல் ஒன்று தோன்றிடுமே!

காற்றே இல்லா இடமில்லை
காலம் எல்லாம் வீசிடுமே
தூற்றிக் கொள்வோம் நெல்லினையே
காற்று உள்ள போதினிலே

குளிராய் காற்று வீசிடுமே
கூதல் கூட வந்திடுமே
வாடைக் காற்றும் இதுவேதான்
வாரி மழையும் பொழிந்திடுமே

## 27. பட்டம்

பட்டம் நல்ல பட்டமிது
பாலர் ஏற்றும் பட்டமிது
சிட்டுப் போன்றே விரைந்தேறும்
சிறுவர் நாமே ஏற்றிடுவோம்

பட்டு பட்டு உடைபோலே
பலரும் ஏற்றும் பட்டங்கள்
எட்டு மூலைப் பட்டங்கள்
எட்டா உயரம் சென்றிடுமே

விண்ணும் நன்கு கூவிடவே
விண்ணில் உயரப் பறந்திடுமே
மண்ணில் நின்று நாமேற்ற
மேலும் மேலும் விரைந்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. முருகன்

முருகன் முருகு நிறைந்தவனே
முன்னை நாளில் பிறந்தவனே
கருணைக் கடலாம் சிவனுக்கே
குருவாய் ஞானம் கொடுத்தவனே

கந்தன் என்று அழைத்திடுவோம்
கருணைக் கடலெனப் போற்றிடுவோம்
குமரன் என்றும் அழைத்திடுவோம்
குறைகளை எல்லாம் கூறிடுவோம்

மாசே இல்லாச் சிவனுக்கே
சிசு வாய் இவனும் உதித்தனனே
தேவர் துயரைத் துடைத்தவனே
யாவரும் வணங்கித் துதிப்பவனே

## 29. ஆகாய விமானம்

ஆட்களை எல்லாம் ஏற்றிடுமே
ஆகாய வழியே பறந்திடுமே
நாட்டு மக்கள் பயன்பெறவே
நாமும் செய்த வண்டியிது

மாடும் இழுத்து வருவதில்லை
மாயம் நிறைந்தே விரைந்தேறும்
சூடு குளிரைத் தாண்டியுமே
சுதந்திரம் கொண்டு பறந்திடுமே

குதிரை இதையும் இழுப்பதில்லை
குதித்துப் பறக்கும் வண்டியிது
பதியின் கையில் சவுக்குமில்லை
மதியை நோக்கி விரைந்திடுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. மயில்

மயிலே மயிலே ஆடிடுவாய்
குயிலும் பாடும் கீதத்திற்கே
பயிலுகின்ற சிறுவருமே
பார்த்துப் பார்த்து மகிழ்ந்திடவே

பாரிய வானும் கறுத்திடவே
பரவசம் கொண்டே ஆடிடுவீர்
பார்க்கப் பார்க்க அழகான
புள்ளித் தோகை விரித்திடுவீர்

முருகே நிறைந்த குமரனது
அழகு நிறைந்த வாகனமே
பெருமை கொண்டு அவனேறி
பாரைப் பவனி வந்திடுவான்

## 31. குழந்தை

குழந்தை நல்ல குழந்தையிது
மழலை பேசும் குழந்தையிது
அழுதல் கண்டால் அணைத்திடுவோம்
அன்பாய் முத்தம் கொடுத்திடுவோம்

முல்லைச் சிரிப்பும் சிரித்திடுமே
மூர்க்கம் கூடத் தவிர்த்திடுமே
எல்லையில்லா அன்புடனே
எம்மைக் களிப்பில் ஆழ்த்திடுமே

குற்றம் செய்தால் மறந்திடுமே
குறும்பு செய்தே மகிழ்ந்திடுமே
எறும்பு போன்றே உற்சாகமாய்
என்றும் வாழ எண்ணிடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. தைப்பொங்கல்

தையில் இதுவும் பிறந்திடுமே
தமிழர் உரிமை ஆகிடுமே
பைந்தமிழ் மக்கள் பற்றுடனே
பாரில் பொங்கும் நாளிதுவே

மழையும் பொழிந்து வந்திடுமே
மாந்தர் போற்றும் சூரியனால்
தழைகள் எல்லாம் தளிர்த்திடுமே
உழவுத் தொழிலும் பெருகிடவே

பரிதி செய்த நன்றியினை
பாரில் மக்கள் போற்றிடுவர்
பதியாய் இவனை மதித்திடுவர்
பொங்கல் பொங்கித் துதித்திடுவர்

## 33. அன்புத் தம்பி

ஊக்கம் நிறைந்த தம்பியவன்
உடனாய்ப் பிறந்த தம்பியவன்
துக்கம் கண்டால் அழுதிடுவான்
தூய்மை கொண்டே இருந்திடுவான்

அண்ணா என்று என்னையுமே
அன்பு பொங்க அழைத்திடுவான்
எண்ணும் எழுத்தும் கண்ணென்றே
என்றும் நன்கு போற்றிடுவான்

தனியே என்னை விடமாட்டான்
தானும் கூட வந்திடுவான்
இனிய எந்தன் பிறவியவன்
இனிதே வாழ வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. புத்தகம்

புத்தகம் நல்ல புத்தகமே
புலமை அடைய வைத்திடுமே
எத்தனை எத்தனை புத்திமதி
என்றும் என்றும் தந்திடுமே

மேதை ஆக்கி வைத்திடுமே
மேலும் எம்மை உயர்த்திடுமே
பேதைத் தன்மை நீக்கிடுமே
பேரும் புகழும் தந்திடுமே

கற்க வைத்து வந்திடுமே
கல்வியின் மகிமை உணர்த்திடுமே
பற்றுடன் பாடம் தந்திடுமே
பண்டிதர் ஆக்கி வைத்திடுமே

## 35. பாரதியார்

பாரத நாட்டில் உதித்தவரே
பாரே புகழும் பாவலரே
பாரதி என்ற பெயர் பெற்ற
பாட்டுப் புலவன் இவனன்றோ

ஏட்டில் பாடம் கற்றவரே
எட்டாப் புகழும் பெற்றவரே
நாட்டில் செய்யும் குற்றங்களை
நாவால் முற்றும் அழித்தவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் பாட்டைத் தந்தவரே
கடவுள் அருளைப் பெற்றவரே
பெண்கள் விடுதலை அடைந்திடவே
பண்ணோ டிசையும் தந்தவரே

சுந்தர நாடு இந்தியாவும்
சுதந்திரம் பெறவே உழைத்தவரே
அந்நியர் ஆட்சி விலகிடவே
மாந்தரைக் கூவி அழைத்தவரே.

## 36. அப்பா

அப்பா எங்கள் அப்பாவே
அன்பு மிகுந்த உத்தமரே
தப்பு செய்தால் கொதித்திடுவார்
தமிழர் மொழியைப் போற்றிடுவார்

பள்ளிப் பாடம் கற்பிப்பார்
அள்ளி அறிவுரை தந்திடுவார்
உள்ளங் குளிர வைத்திடுவார்
உண்மை அன்பைச் செலுத்திடுவார்

கற்கவே வைத்து வந்திடுவார்
கதற எம்மை விடமாட்டார்
வற்றியே முடியா அன்பென்று
வாரி அணைத்துக் கூறிடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. ஆசிரியர் திரு. செ. மதுரநாயகம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை யொட்டி நடைபெற்ற பிரியாவிடையின் போது பாடிய கவிதை

கண்ணைப் போன்ற கல்வியிலே
எண்ணை விரும்பிக் கற்பிப்பார்
நண்பன் போன்று நம்முடனே
நட்புடன் நாளும் இருந்திடுவார்

உண்மை அன்பை உடையவராய்
பண்பாய் நிதமும் நடந்திடுவார்
வீணே நேரம் போக்காது
விரைவாய் பாடம் படிப்பிப்பார்

வீரன் போன்றே கம்பீரமாய்
வீறு நடையே போட்டிடுவார்
பாரில் பாவலன் ஆக்கிடவே
பள்ளிப் பாடம் தந்திடுவார்

தடியும் கையில் ஏந்திடுவார்
அடியும் நன்கு போட்டிடுவார்
படியும் என்றே பகன்றிடுவார்
பண்டிதர் ஆக்க முயன்றிடுவார்

சேய்கள் எமக்கு கற்பித்து
ஓய்வு பெற்ற ஆசானை
நாயைப் போன்று மறவாமல்
நாளும் மதித்து நடப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிடவே
மதுர மொழியைப் பேசிடுவார்
மதுர நாயக வாத்தியாரை
மங்களம் பொங்க வாழ்த்துகிறேன்

## 38. ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு நடைபெற்ற பிரியாவிடையின் போது பாடிய கவிதை

ஐந்தாம் ஆண்டு வகுப்பினிலும்
ஐயம் இன்றிக் கற்பித்த
பைந்தமிழ் அதிபர் அவர்களுக்கு
பகருகின்றேன் முதல் வணக்கம்

எண்ணை விரும்பிப் படிப்பிக்கும்
எங்கள் வகுப்பு ஆசானே
எண்ணிய படியே கூறுகிறேன்
எண்ணில்லாத வணக்கங்கள்

கற்க வைத்த மற்றவர்க்கும்
குற்றம் இன்றிப் பற்றுடனே
சீற்றம் அற்றுக் கூறுகின்றேன்
சிறந்த முறையில் வணக்கத்தை

மற்றும் மாணவர் யாவருக்கும்
மாசு இல்லா வணக்கத்தை
கற்றுணர்ந்த மாணவன் நான்
களிப்புப் பிறக்கக் கூறுகின்றேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. காந்தி சனசமூக நிலைய கையெழுத்துச் சஞ்சிகை உதயனுக்கு அனுப்பிய வாழ்த்துப்பா

உதயம் என்ற பேருடனே
மாதம் ஒருமுறை மலர்ந்திடுவாய்
நிதமும் மக்கள் வாசிக்க
நீதிக்கதைகள் தந்திடுவாய்

முன்னே துன்பம் வந்ததனால்
மடிந்து போன மலரே நீ
இன்பம் பொங்கி வந்திடவே
இனிய மணத்தைப் பரப்பிடுவாய்

காந்தி நிலைய நூலகத்தில்
களிப்புப் பிறக்க இருந்திடுவாய்
மாந்தர் பலரைச் சந்தித்து
மனதை உன்பால் திருப்பிடுவாய்

பாலர் நிகழ்ச்சி பலவற்றை
பட்டு இதழில் ஏந்திடுவாய்
காலத்தை வீணே போக்காது
களிப்புடன் கழிக்க உதவிடுவாய்

நீதி தருமம் போதிப்பாய்
மதியை மேலும் வளர்த்திடுவாய்
ஓதிடும் கவிதைகள் பலவற்றை
பாதி உடலில் ஏற்றிடுவாய்

மாதம் மாதம் மறையாமல்
'உதயம்' ஆகி வந்திடவே
மங்களம் பொங்க வாழ்த்துகிறேன்
முருகன் அருளை வேண்டுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. கலைமகள்

வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாய்
வித்தைகள் எல்லாம் காட்டிடுவாய்
உள்ளம் குளிர வைத்திடுவாய்
அள்ளி அருளைத் தந்திடுவாய்

பங்கயமதிலே வீற்றிருப்பாய்
பவழவாயும் திறந்திடுவாய்
சங்கத் தமிழும் கற்க வைப்பாய்
பொங்கு தமிழை உயர்த்திடுவாய்

கலையில் அரசி வாணியம்மா
கலையை மேலும் வளர்த்திடுவாய்
மலையைப் போன்ற கோயிலுக்குள்
சிலையாய் நீயும் இருந்திடுவாய்

வீட்டில் குடியைக் கொண்டிடுவாய்
ஏட்டைக் கையில் தந்திடுவாய்
நாட்டுப் பற்றை வளர்த்திடுவாய்
நம்மை ஒன்று சேர்த்திடுவாய்

KOHA
JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org